
ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீலோககுரவே நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## எறும்பியப்பா - வருஷ திருநக்ஷத்திரம் - ஐப்பசி - ரேவதி




மாமுனிகள் ஈடு கோஷ்டி - இதில் எறும்பியப்பா அலங்கரிப்பதைக் காணலாம்

### தனியன்

துலா ரேவதி ஸம்பூதம் வரயோகிபதாச்ரிதம் /
ஸர்வ வேதாந்த ஸம்பூர்ணம் அப்பாசார்ய மஹம் பஜே //

திருவவதார ஸ்தலம் - எறும்பி (சோளிங்கர் அருகில் சித்தூர் சாலையில் உள்ளது)
வம்ஸம் - முடும்பை
ஆசாரியர் - மணவாளமாமுனிகள்
சிஷ்யர் - திருக்குமாரர் பெரியப்பா
இவர் மாமுனிகள் ஏற்படுத்திய அஷ்டதிக் கஜங்களில் ஒருவராவார்.
திருநாமங்கள் - அப்பா, தேவராஜர்
திருவராதனப் பெருமாள் - சக்ரவர்த்தி திருமகன்
இவர் வம்ஸத்தில் அவதரித்த மற்ற ஆசாரியர்கள் - பிள்ளை லோகாசாரியர்,
ப்ரதவாதி பயங்கரம் அண்ணன், ஆத்தான் ஸ்வாமி

இவர் செய்தருளின க்ரந்தங்கள் - வரவரமுநிசதகம், பூர்வதினசர்யை, உத்தரதினசர்யை, ஸ்ரீசைலேசாஷ்டாகம்

இவர் எறும்பி என்கிற ஊரில் திருவவதரித்தால், இவருடைய பெயரான அப்பா என்கிற திருநாமத்தோடு ஊர் பெயரையும் சேர்த்து எறும்பியப்பா என்று அழைத்து வந்தனர்.

இவர் மாமுனிகளிடம் வடுகநம்பியைப்போலே தேவு மற்றறியாதே அத்யந்தாபிமதராயிப்பர்.

## இவர் அருளியுள்ள உபதேசரத்தின மாலையின் சாற்றுப்பாட்டு

மன்னுயிர்காளிங்கே மணவாளமாமுனிவன்
பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை – உன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மைக்
கரத்தாலே தீண்டல் கடன்.

**இவர் அருளியுள்ள ஸ்தோத்தரங்களிலிருந்து சில ஸ்லோகங்கங்களை கீழே அனுபவிப்போம்**

### பூர்வதினசர்யா

#### முதல் ஸ்லோகம்

ஸௌம்யஜாமாத்ரு யோகீந்த்ர சரணாம் புஜஷட்பதம்
தேவராஜகுரும் வந்தே திவ்யஜ்ஞாநப்ரதம் ஸுபம்.

அங்கே கவேர கந்யாயாஸ் துங்கே புவநமங்களே
ரங்கே தாம்நி ஸுகாஸீநம் வந்தே வரவரம் முநிம்

#### 32ஆம் ஸ்லோகம்

தத: ஸுபாஸ்ரயே தஸ்மிந் நிமக்நம் நிப்ருதம் மந:
யதீந்த்ர ப்ரவணம் கர்த்தும் யதமாநம் நமாமி தம்.

### உத்திர தினசர்யா

#### முதல் ஸ்லோகம்

இதி யதிகுல துர்ய மேத: மாநை:
ஸ்துதி மதுரை: உதிதை: ப்ரஹர்ஷயந்தம்
வரவர முநிமேவ சிந்தயந்தீ
மதிரிய மேதி நிரத்யயம் ப்ரஸாதம்.

## 22ஆம் ஸ்லோகம்

த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குஸ விபூதய:
ராமாநுஜ பதாம்பாதாம்போஜா ஸமாஸ்ரயண ஸாலிந:

## ஸ்ரீவரவரமுநி சதகம்

## முதல் ஸ்லோகம்

வரவரமுநிவர்யபாதுரத்நம் வரதகுரும் குருமாஸ்ரயே குரூணாம்
உபநிஷதுபகீத மர்த்ததத்த்வம் ததிஹ யதீயவஸம்வதம் ஸமிந்தே.

## 104ஆம் ஸ்லோகம்

அநுதிநம நவத்யை: பத்யபந்தைரமீபி:
வரவரமுநிமுநிதத்த்வம் வ்யக்த முத்கோ ஷயந்தம்
அநுபதமநுகச்சந்நப்ரமேய: ஸ்ருதீநாம்
அபிலஷிதமஸேஷம் ஸுயதே ஸேஷஸாயீ.

## இவர் அருளியுள்ள ஸ்ரீசைலேசாஷ்டகம்

ஸெம்யஜாமாத்ரு யோகீந்த்ர சரணாம் புஜஷட்பதம்
தேவராஜகுரும் வந்தே திவ்யஜ்ஞாநப்ரதம் ஸுபம்.

சேஷ: ஸ்ரீமாநஜநி ஹி புரா ஸெம்யஜாமாத்ரு யோகீ
போகீ பூதஸ்ததநு பகவான் ராகவஸ்யாநுஜந்மா

பூத்வாபூயோ வரவரமுநி: பூயஸா பாஸமாந:
ரசஷத்வஸமாந் ரகுகுலபதே: ஆஸ்திதோ பத்ரபீடம் 1.

ச்ரோதும் த்ராவிடவேதபூரி விவ்ருதம் ஸெம்யோபயந்த்ருமுநே
உத்கண்டாஸ்தி மமைநமாநயத தம் தார்சஷயாஸ்ரயம் மண்டபம்
ஆவிஸ்யார்சகமூசிவாநிதி முதா நிஸ்ஸேஷலோகாந்வித:
ரங்கீ வத்ஸரமேகமேவ ஸ்ருணோத் வ்யக்தம்யதோக்தக்ரமாத் 2.

ஸ்ரீபூம்யாம் ரங்கநாதே சடஜிதுபநிஷத்வ்யாக்ரியாம் ஸ்ரோதுகாமே
ஸேஷஸ்ஸந்தோஷயிஷ்யந் வரவரமுநிதாம் ப்ராப்ய யோ வர்த்ததேக்ரே
காஷாயஸ்ரீதுலஸ்யம்புஜமணி ஸுஸிகாயஜ்ஞஸுத்ர த்ரிதண்டை:
பாந்தம் ஸுப்ரோர்த்வபுண்ட்ரம் ஸ்மர ஹ்ருதய ஸதா கோஸமுத் ராங்கஹஸதம் 3.

க்ருபயா பரயா ஸ ரங்கராட் மஹிமாநம் மஹதாம் ப்ரகாஸயந்
லுலுபே ஸ்வயமேவ சேதஸா வரயோசிப்ரவரஸ்ய சிஷ்யதாம் 4.

ஸமாப்தௌ க்ரந்தஸ்ய ப்ரதிதவிவிதோபாயநசயே
பரம் ஸஜ்ஜீபூதே வரவரமுநேரங்க்ரிஸவிதே
ஹடாத்பால: கஸ்சித் குத இதி நிரஸ்தோப்யுபகத:
ஜகௌ ரங்கேஸாக்ய: பரிணதசதுர்ஹாயந இதம் 5.

ஸ்ரீமாந் ரங்கேஸ்வரோ யத்வகுளதர வசோ பாஷ்ய ஸாரார்த்தஜாதம்
ஸ்ருத்வா ஸௌம்யோபயந்தா முநிவரசரணே ச்சாத்ரபாவம் ப்ரபந்ந:
ஸ்ரீசைலேசேதி பத்யம் ககபதிநிலயே மண்டபே தத்ஸமாப்தௌ
உக்த்வாத்யேதவ்யமேதந்நிகில நிஜக்ருஹேஷ்வாதி ஸத்தத்த தாதௌ 6.

வேதாதௌ பூர்வமுக்தா ஹரிரிதி ஸுஜநோவக்தி பஸ்சாத்யதோமித் யேவம்
வக்தவ்யமேதத்வகுலதரவசோநுஸ்ரவராம்பகாலே
ஸ்ரீஸேலேஸேதி பத்யம் ப்ரதமமத்ஸதாம் ஸம்ப்ரதாயைகநிஷ்டை:
லசஷ்மீநாதேதி பத்யம் ஸ்வயமிதி பகவாநாதிஸத்ரங்கநாத: 7.

யத்வத்வக்தும் ந யுக்தம் ப்ரணவஹரிபதாப்யந்தரேந்யத்பதம் தத்
க்ருஷ்ணேத்யேதத் கதாசிந் முநிசதவசநைர்வைதிகைர் ப்ரஹ்மநிஷ்டை:
தத்வத்ரங்கேஸபக்தை:ஸமதமநியதை: ஸாதுபிஸ்தத்வவித்பி: வக்தும்
யுக்தம் ந மத்யே ஸபதி நியதயோரேதயோ: பத்யமந்யத் 8.

ஸடரிபுரேக ஏவ கமலாபதிதிவ்யகவி: மதுரகவிர்யதா ச ஸட்ஜிந்முநி முக்யகவி:
யத்குலபுங்கவஸ்ய புவி ரங்கஸுதாகவிராட் வரவரயோசிநோ வரதராஜகவிஸ்சததா 9.

<u>எறும்பியப்பா மாமுனிகளை ஆச்ரயித்தல்</u>

ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலினின்றும் திருமலைக்கு எழுந்தருளுவதாகச் சொல்லி எறும்பிக்கு வர, அப்பா அவரை அழைத்து ஆதரித்து, அவரிடமிருந்து கோயில் வ்ருத்தாந்தங்களையும், பெரிய ஜீயர் விருத்தாந்தங்களையும் கேட்டரிந்தார்.

அந்த ஸ்ரீவைஷ்ணவரும் திருமலையாத்திரை முடித்துக்கொண்டு வந்த பிறகு, அவரைக் கூட்டிக் கொண்டு அப்பா கோயிலுக்கு எழுந்தருளி நம்பெருமாளை திருவடி தொழுதார். பிறகு பெரிய கந்தாடை அண்ணன் ஆப்த பந்து ஆகையாலே, அவர் திருமாளிகையிலே அமுதுசெய்தருளி, அவருடனே ஜீயர் ஸந்நிதிக்கெழுந்தளினார். ஜீயரும் இவரை பெரிய வித்வான் என்று அறிந்து இவருக்கு உயர்வறவுயர்நல ப்ரவேசத்தை உபந்யஸித்துக் காட்டினார். அப்பா அது கேட்டு ஆஸ்சர்யப்பட்டு ஜீயருக்குத் தமிழைத்தவிர ஸம்ஸ்க்ருதத்தில் மிகவும் பரிச்யமில்லை என்று கேட்டிருந்தோம். ஆனால் இவர் உபயவேதாந்தத்திலும் மிகவும் நிபுணரயிருக்கிறார் என்று நினைத்திருக்க, ஜீயர் இவரை மடத்தில் அமுது செய்யப்ரார்த்தித்தார். அவரும் ஸந்யாஸிகளுடைய அந்நமும், ஸந்யாஸிகளுடைய பாத்ரத்திலுள்ள அந்நமும், ஸந்யாஸிகளால் அனுப்பப்பட்ட அந்நமும் இப்படி மூன்றும் புசிக்கத்க்கவையன்று, அப்படி புசித்தானாகில் சாந்த்ராயண வ்ரதத்தை அநுஷ்டிக்கக்கடவன் என்கிற சாமாந்ய சாஸ்த்திரைத்தை மனத்தில் கொண்டு, போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே (திருமாலை 41ஆம் பாசுரம்) என்கிற பாசுரத்தை மனத்தில் கொண்டு, ப்ரார்த்தயேத் என்கிற விசேஷ சாஸ்திரத்தை கடைபிடிக்காமல், ஜீயர் திருவடிகளில் ஆச்ரயிக்காமல் மறுத்தெழுந்தருளி, அண்ணனைப் போரவெறுத்து, அவர் திருமாளிகைக்கும் எழுந்தருளாமல், அப்பொழுதே கோயிலிருந்து தம் ஊருக்கு எழுந்தருளினார்.

ஊறுக்கு வந்து சேர்ந்த பிறகு, தமது திருவாராதன பெருமாளான சக்ரவர்த்தி திருமகனாரைத் திருவடி விளக்குவற்காகக் கோயிலாழ்வாரைத் திருக்காப்பு நீக்கப்புக, அது ஸகலோபாயங்களாலும் நீக்கப் போகாமையாலே மிகவும் துக்கமடைந்து அமுது செய்யாமலே கண்வளர்ந்தார். அவ்வளவிலே அப்பாவின் ஸ்வப்நத்திலே சக்ரவர்த்தி திருமகன் எழுந்தருளி, இவரிடம் திருவனந்தாழ்வான் ஆச்ரிதஸுலபத்துடன் மணவாள மாமுனிகளாக அவதரித்து லோகத்தை ரசஷிப்பதற்காக ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வருகிறார். தத்வஜ்ஞானம் பெறுவதற்காக அவரை நீர் பற்றுவீராக என்று உத்தர விட்டருளனார். நீர் ஜீயர் திருவடிகளிலே ஆச்ரயித்து அபராதசஷாமணம் பண்ணிக் கொண்டு வந்தாலொழிய உம்முடைய கையினாலே நாம் திருவாராதநம் கொள்ளக் கடவோம். சடக்கெனப் போகீர் என்று நியமித்தருளினார். அப்பாவும் திருகண்கள் விழித்து, ஸவப்நத்தில் எம்பெருமான் கூறியதை நிறைவேற்று வதற்காக, அப்போதே புறப்பட்டு கோயிலை நோக்கிச் சென்றார். போகும் பொழுது அங்கே கவேர கந்யாயாஸ் துங்கே புவநமங்களே ரங்கே தாம்நி ஸுகாஸீநம் வந்தே வரவரம் முநிம் என்ற ஸ்லோகத்தை அநுசந்தித்துக் கொண்டு சென்றார். (இந்த ஸ்லோகத்தின் பொருள் - திருக்காவேரி மத்தியிலே, உலகங்களுக்கு மங்கள கரமாக விளங்கும் திருவரங்கம் திருப்பதியில் இனிதாக எழுந்தருளி உள்ள மணவாள மாமுனிகளை அடிபணிகிறேன்)

கோயில் வந்து சேர்ந்த அளவிலே, ஜீயரும் பெருமாளை ஸேவிப்பதற்க்காகப் புறப்பட்டு எழுந்தருளக்கண்ட அப்பா, அவர் திருவடிகளிலே தண்டன் ஸமர்பிக்க, ஜீயரும் இவருடைய உஜ்ஜீவநத்திலேயூன்றி போவராகையாலே, மீண்டும் மடத்தின் உள்ளே புக்கு, ஆத்மலாபத்தைக்காட்டிலும் வேறொரு உயர்ந்த லாபமில்லை என்று அறுதியிட்டு, தம் சிஷ்யர்களை கோயிலுக்கு எழுந்தருளுங்கள் என்று சொல்லி அனுப்பியருளினார். அப்பா நெடுந்தூரத்திலிருந்து வந்தவராகையாலே வழியில் உண்டான விடாயெல்லாம் தீர பசியில் சோற்றைக் கண்டாப்போலே, வைத்த கண் வாங்கமால் ஜீயருடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை அநுபவித்துக் கொண்டு போந்தார்.

மறு நாள் காலை, ஜீயர் காலை அநுஷ்டானங்களை எல்லாம் முடித்த பிறகு, ஸந்நதி ஸதம்பத்தின் மூலபூதலத்திற்கு பூஷணமாக எழுந்தருளினார். அப்பொழுது தான் அப்பாவும், கோயில் அண்ணனைப் புருஷகாரமாகப் பற்றிக் கொண்டு, ஜீயரை தீர்க்கமாக தண்டன் ஸமர்ப்பித்து அடியேனை அங்கீகரித்தருள வேணும் என்று விண்ணப்பித்தார். மாமுனிகளும் அவ்வண்ணமே அவரை அன்புடன் ஏற்றுக்கொண்டு திருவிலச்சினை முதலான பஞ்ச ஸம்ஸ்காரங்கனளயும் செய்தார். எறும்பியப்பாவுக்கு பிறவிப் பிணியைப் போக்கிஅருள்வதான தம்முடைய திருவடித் தாமரைகளின் ஸம்பந்தமான ஸ்ரீபாததீர்தத்தைப் பிரஸாதித்து அருளினார்.

மாமுனிகளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு, அவர் விஷயமாக பூர்வ தினசர்யா – 32 ஸ்லோகங்கள், உத்தர தினசர்யா – 22 ஸ்லோகங்கள், ஸ்ரீவரவரமுநி ஸதகம் - 104 ஸ்லோகங்கள், ஸ்ரீசைலேசாஷ்டகம் - 9 ஸ்லோகங்கள் அருளி உள்ளார். மணவாள மாமுனிகள் அருளிச் செய்த உபதேசரத்ன மாலையின் கடைசியில் சொல்லப் படும் மன்னுயிர்காளிங்கே என்னும் சாற்று பாசுரம் இயற்றினார்.

மாமுனிகள் பல இடங்களிலும் வைணவ சமயத்தை பரப்பவும், அருளிச் செயல்களின் தாத்பர்யங்களை எடுத்து உரைக்கவும் பிரஸித்த பெற்ற வித்வான்களை அஷ்டதிக்கஜங்களாக நியமித்தார். அவர்களுள் எறும்பியப்பாவும் ஓருவர் ஆவார்.

## மன்னுயிர்காளிங்கே என்னும் சாற்று பாசுரம் அவதரித்த வரலாறு

பெரியஜீயரின் திருவடிகளிலே எறும்பியப்பா ஆச்ரயித்திருந்தபோது, நாள் தோறும் ஜீயருடன் பெரியபெருமாள் மங்களாசாஸனத்துக்கு உடன் செல்வதை வழக்கமாகக் கொண்டு இருந்தார். அப்போது மாமுனிகள் திருவாய்மொழிப் பிள்ளை மூலம் வந்த உபதேச மார்க்கத்தைச் சிந்தையில் கொண்டு பின்புள்ளோருக்கு பயன்படும்படியாக ஒரு ப்ரபந்தம் அருளிச் செய்ய திருவுள்ளம் கொண்டார். ஒரு நாளைக்கு ஒரு பாசுரமாகப் பெரிய பெருமாள் திருமுன்பு விண்ணப்பம் செய்து வந்தார். எம்பெருமானார் நியமித்த ஸிம்ஹாஸனாதிபதிகள் நினைவாக 74 பாசுரங்கள் மனத்தில் உருவாக்கி விண்ணப்பம் செய்தார். 74 பாசுரங்களையும் பெரிய பெருமாள் திருமுன்பு தலைக்கட்டுவதாகத் திருவுள்ளம் பற்றி எழுந்தருளிய போது, பெரிய பெருமாள் மாமுனிகளுக்கு 73ஆவது பாசுரத்தோடு பூர்த்தி செய்யச் சொல்லி, அருகில் ஸேவித்து நின்ற எறும்பியப்பாக்கு அருளப்பாடு சாதித்து நீர் ஒரு வெண்பா நம் பெரிய ஜீயர் விஷயமாக விண்ணப்பம் செய்வீர் என நியமித்தார். இவரும் நாயன்தே என்று ஸம்மதித்து, ஆங்கே அப்பொழுதே பெரிய ஜீயர் முன்பாக கீழ்க்கண்ட பாசுரத்தை விண்ணப்பம் செய்தார்.

மன்னுயிர்காளிங்கே மணவாளமாமுனிவன்
பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை — உன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மைக்
கரத்தாலே தீண்டல் கடன்.

இந்த பாசுரம் உபதேசரத்தினமாலை சாற்றுமுறையின் போது அநுஸந்திக்கப்படுகிறது. இப்பாசுரத்தின் பொருள் - சேதனர்களே ! மணவாள மாமுனிவனன் பொன்னடியாம் செங்கமலப்போது என்னும் திருநாமத்தை உடைய ஸ்ரீபாதுகைகளை சிரஸால் ஸ்பர்சிக்கில், முக்தி ஸாம்ராஜ்ய அநுபவத்திற்கு முன், அமானவன் என்பவன் மணவாள மாமுனிகள் திருவடிகளைப் பற்றி, நம்மை தன் கையினால் ஸ்பர்சித்தல் இன்றியமையாததாகும். அது மாமுனிகளின் பக்தர்களுக்கு நேருவது கடமையாகும் என்பது ஒரு கருத்து. அது நேருவது அவசியம் அற்றது என்பது மற்றொரு கருத்து.

மேலே சொன்ன விஷயங்கள் அடியேனுடைய ஆத்ம நண்பர் மதுரை பேராசிரியர் முனைவர் ஸ்ரீ.உ.வே இரா.அரங்கராஜன் ஸ்வாமி அருளியுள்ள மன்னுபுகழ் மணவாளமாமுனிவன் என்ற நூலில் இருந்தும், பிள்ளைலோகம் ஜீயர் அருளியுள்ள யதீந்த்ரப்ரவணப்ரபாவம் என்ற நூலில் இருந்தும் எடுக்கப்பட்டது.

ஸ்ரீமத் ரங்கம் ஜயது பரமம் தாம தேஜோ நிதாநம்
பூமா தஸ்மிந் பவது குஸலீ கோபி பூமாஸஹாய:
திவ்யம் தஸ்மை திஸது விபவம் தேஸிகோ தேஸிகா நாம்
காலே காலே வரவரமுநி: கல்பயந் மங்காளாநி.

ஜயதுயஸஸா துங்கம் ரங்கம் ஜகத்த்ரய மங்களம்
ஜயது ஸுசிரம் தஸ்மிந் பூமாரமாமணிபூஷணம்
வரதகுருணா ஸார்த்தம் தஸ்மை ஸுபாந்ய பிவர்த்தயந்
வரவரமுநி: ஸ்ரீமாந் ராமாநுஜோ ஜயது சஷிதௌ.

எறும்பியப்பா திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: